**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி.**
முன்னிலை: திருமதி. V.R.லதா, M.A., BL.,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி.
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்: 197/2019**
**[CNR.NO.TNKI01-006151-2019]**

( முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.1/2012, குற்றவியல் நீதித்துதறை நடுவர், ஊத்தங்கரை, கல்லாவி காவல் நிலைய குற்ற எண்.359/2001)

| | |
|---|---|
| 1. புகார்தாரர் / குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்,<br>கல்லாவி காவல் நிலையம்,<br>குற்ற எண்.359/2001 |
| 2. எதிரியின் பெயர் மற்றும் முகவரி | 1. முனுசாமி வயது (38/2001),<br>த/பெ.சீனிவாசன்,<br>மேட்டுசூளக்கரை கிராமம்<br>ஊத்தங்கரை தாலுகா,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br><br>**2.பெயிண்டர் மாதேஷ்(எ)அண்ணாமலை த/பெ.பன்னீர்செல்வம்,<br>மேட்டுசூளக்கரை கிராமம்,<br>ஊத்தங்கரை தாலுகா,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br>(இவர் கடந்த 10.10.2019ம் தேதி இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டதால் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரையில் இந்த எதிரியின் மீதான குற்றம் அற்றுப்போய் விட்டதாக மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.** |
| 3. எதிரி கைது செய்யப்பட்ட நாள்<br>எதிரி சரண்டரான சென்ற நாள் | ----<br>27.07.2001 & 19.03.2019 |
| 4. புகார் கொடுக்கப்பட்ட நாள் | 25.06.2001 |
| 5. இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 30.05.2002 |

| | | | |
|---|---|---|---|
| 6. விசாரணை நீதிமன்றத்திலிருந்து வழக்கு கோப்பு அனுப்பப்பட்ட நாள் | ---- | | |
| 7. விசாரணை நீதிமன்றத்தின் பெயர் | குற்றவியல் நீதித்துறை நடுவர், ஊத்தங்கரை, கல்லாவி காவல் நிலைய குற்ற எண்.359/2001 | | |
| 8. எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் | **1-வது குற்றச்சாட்டு:**<br>சட்டப்பிரிவு 148 இதச-ன் கீழ்<br>**2-வது குற்றச்சாட்டு:**<br>சட்டப்பிரிவு 341 இதச-ன் கீழ்<br>**3-வது குற்றச்சாட்டு:**<br>தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச-ன் கீழ் | | |
| 9. குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 11.12.2020 | | |
| 10. எதிரியின் கூற்று | குற்றவாளி இல்லை | | |
| 11. பல்வகை குற்றவியல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அவற்றின் முடிவு அல்லது மேற்படி மனுக்களின் பேரிலான மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் முடிவு கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழான மனுக்களை தவிர்த்து | எதுவும் இல்லை | | |
| 12. சாட்சிகளின் முதல் மற்றும் குறுக்கு விசாரணை தேதிகள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | அ.சா.1 | 11.03.2024 | 11.03.2024 |
| | அ.சா.2 | 11.03.2024 | --- |
| | அ.சா.3 | 18.03.2024 | ---- |
| | அ.சா.4 | 01.04.2024 | ---- |
| | அ.சா.5 | 14.10.2024 | ---- |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | அ.சா.6 | 05.02.2025 | 05.02.2025 |
| | அ.சா.7 | 26.03.2025 | 26.03.2025 |
| | அ.சா.8 | 28.10.2025 | 28.10.2025 |
| | அ.சா.9 | 17.02.2026 | 17.02.2026 |
| 13. கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) ன் படியான விசாரணை நாள் | 24.02.2026 | | |
| 14. எதிரியின் தலைமறைவு, அவர் நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்பட்ட நாள் போன்ற விவரம் | -- | | |
| 15. எதிரியின் கூற்று | குற்றவாளி அல்ல | | |
| 16. அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.M.விஸ்வபாரதி | | |
| 17. எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் | திரு.N.V.இமயம், மற்றும் C.சந்திரசேகர் | | |
| 18. வாதங்கள் கேட்கப்பட்ட நாள் | 09.03.2026 | | |
| 19. தீர்ப்பு விவரம் | முடிவாக எதிரி மீதான சட்டப்பிரிவு 148, 341 இதச, மற்றும் சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதசஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு வழங்கி, எதிரி மேற்ச்சொன்னகுற்றச்சாட்டுகளின்படி | | |

| | |
|---|---|
| | குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஏதேனுமிருப்பின் அதனை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.<br><br>இந்த வழக்கில் சி.பி.எண்.13/2024ல் உள்ள கைப்பிடி அளவுள்ள பத்து கருங்கற்களை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |
| 20. தீர்ப்புரை நாள் | 12.03.2026 |

இவ்வழக்கு என் முன்னர் 09.03.2026-ஆம் தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.M.விஸ்வபாரதி., அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.N.V.இமயம், C.சந்திரசேகர்., ஆகியோர்களும் ஆஜராகி ஆற்றிய இருதரப்பு வாதுரைகளை கேட்டும் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.1/2012 ஆக ஊத்தங்கரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்க வழக்கு என்பதால் மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வழக்கின் தாய் வழக்கு அமர்வு வழக்கு எண்.76/2014 மற்ற எதிரிகள் குறித்து ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டு, முடிக்கப்பட்டு விட்டது. முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.1/2012 மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரியில் பெறப்பட்டு, அமர்வு வழக்கு எண்.197/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

(அ) கல்லாவி காவல் நிலைய காவல் ஆய்வாளர் இந்த வழக்கின் எதிரி முனுசாமி மீது சட்டப்பிரிவு 148, 341 இதச சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 4 மற்றும் சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

(ஆ) இவ்வழக்கின் எதிரி முனுசாமி என்பவர் விடுதலை சிறுத்தை கட்சியை சேர்ந்தவர் ஆவார். சம்பவ சமயத்தில், விடுதலை சிறுத்தை கட்சித்தலைவர் கைது செய்யப்பட்ட காரணத்தினால் கடந்த 25.06.2001ம் தேதி 20.30 மணியளவில் சாட்சி துரைசாமி என்பவரது வீட்டின் முன்பாக இவ்வழக்கின்

எதிரி முனுசாமி என்பவர் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கலகம் விளைவிக்க வேண்டும் என்ற பொது எண்ணத்தில் கைகளில் பெட்ரோல் பாட்டில்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, கிருஷ்ணகிரி நோக்கி சென்று கொண்டிருந்த டி.சி.டி.1771 என்ற பதிவெண் கொண்ட எஸ்.எம்.பி.எஸ் என்ற பெயர் கொண்ட பேருந்தை சட்டவிரோதமாக தன்னிச்சையாக தடுத்து நிறுத்தினார் என கூறப்பட்டுள்ளது.

(இ) இவ்வழக்கில் முன்னிடப்பட்ட குற்றச்சாட்டானது மேற்படி எதிரி முனுசாமி, பிற நபர்களுடன் சேர்ந்து டி.சி.டி.1771 என்ற பதிவெண் கொண்ட எஸ்.எம்.பி.எஸ் என்ற பெயர் கொண்ட பேருந்தின் டீசல் டேங்கின் மூடியை திறந்தும், பேருந்தின் முன்பக்க காற்றுத்தடைக் கண்ணாடி மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து ரூ.1,85,000/- அளவிற்கு சேதம் விளைவித்ததாலும், இவ்வழக்கின் எதிரி முனுசாமி மேற்க்குறிப்பிட்டபடி பொது சொத்தை தாக்கி சேதப்படுத்த வேண்டும் என்ற சட்டவிரோத கூட்டத்தில் உறுப்பினரான இருந்து செயல்பட்டுள்ளார். எனவே எதிரி முனுசாமி மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்படத்தக்கவர் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேற்சொன்ன அமர்வு வழக்கு எண்.197/2019 வழக்கை கோப்பிலெடுத்துக்கொண்ட இந்நீதிமன்றம் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி குற்றம் புரிந்துள்ளார் என உறுதி செய்து கொள்ளத்தக்க மூலமுதற்கூறுகளும் சான்றுகளும் வழக்கு கோப்பில் இருந்ததால் எதிரி மீது

சட்டப்பிரிவு 148, 341 இதச, மற்றும் சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, விளக்கி, வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி இல்லை என சொன்னதால் அரசு தரப்பு சாட்சிகள் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் வாயிலாகத் தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

அ.சா.1 திரு.சக்திவேல் என்பவர் தனது சாட்சியத்தில், தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் கிருஷ்ணகிரி புறநகர் பணிமனையில் நடத்துநராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 25.06.2001 அன்று எஸ்.எம்.பி.எஸ் தனியார் பேருந்தில் (பதிவு எண்.T.C.D.1771) நடத்துநராக இருந்த போது மாலை 5.30 மணிக்கு செங்கத்தில் இருந்து கிருஷ்ணகிரி வந்தபோது இரவு சுமார் 8.30 மணியளவில் மேட்டுசூளக்கரையில் சுமார் 20 பயணிகளை இறக்கி விட்டு விட்டு அங்கிருந்து கிளம்பி சுமார் 1

பர்லாங் தூரம் பேருந்து சென்றபோது சமார் 25 பேர் சாலையின் இருபுறம் இருந்து வந்து பேருந்தை வழிமறித்து, பேருந்தின் முகப்பு மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளை உடைத்ததாகவும், மேலும் பெட்ரோல் பாட்டிலை கொளுத்தி பேருந்தின் மீது தூக்கி போட்டதில் தீ பிடித்ததாகவும் தெரிவித்துள்ளார். பின்பு தான் அருகில் இருந்த வீட்டிற்கு சென்று உடனடியாக போன் மூலம் கல்லாவி காவல் நிலையத்திற்கும், பேருந்தின் உரிமையாளருக்கும் தகவல் சொன்னதாகவும், பேருந்து முழுவதும் எரிந்து விட்டதாகவும், தீயணைப்பு துறையினர் வந்து அணைத்ததாகவும், அந்த பேருந்தின் மதிப்பு சுமார் 3 லட்சம் இருக்கும் என்றும், பின்னர் ஓட்டுநர் துரை, செக்கிங் வெங்கடேஷ், கிளீனர் பாரதி மற்றும் தானும் கல்லாவி காவல் நிலையத்திற்கு நேரில் சென்று தான் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படுவது, தான் அன்று கைப்பட எழுதி கொடுத்த புகாரின் நகல். அதில் என்ன எழுதப்பட்டது என்று தற்போது தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்து, அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். புகாரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அ.சா.2 திரு.துரை என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது ஓசூரில் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், சம்பவ சமயத்தில் எஸ்.எம்.பி.எஸ் தனியார் பேருந்தில் (பதிவு எண். T.C.D 1771) ஓட்டுநராக இருந்ததாகவும், கடந்த 25.06.2001 மாலை 5.00 மணியளவில்

செங்கத்திலிருந்து கிருஷ்ணகிரி நோக்கி சுமார் 8.15 மணியளவில் மேட்டுசூளக்கரை தாண்டி வந்து கொண்டிருந்த போது திருமாவளவனை கைது செய்திருந்ததால் அவரின் கட்சியை சேர்ந்தவர்கள் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று கோஷம் போட்டவாறு சுமார் 25 பஸ்ஸின் இருபுறமும் இருந்து வந்து கையளவு கல்லை வீசி எறிந்ததாகவும், அதில் கண்ணாடி உடைந்ததாகவும், பாட்டில்களில் பெட்ரோல் நிரப்பி, கொண்டு வந்திருந்ததை தீ வைத்து பேருந்தின் மீது வீசி எறிந்ததில் பேருந்து தீ பற்றி எரிந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 மேலும் தனது சாட்சியத்தில், பேருந்தில் தீ பற்றி எரிந்து புகை மூட்டமாக இருந்ததால் எதிரிகள் யாரையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை, ஆஜர் எதிரி இருந்தாரா என்று சரியாக சொல்லத்தெரியவில்லை என்றும், தங்கள் பேருந்தின் உரிமையாளருக்கும், கல்லாவி காவல் நிலையத்திற்கும், தீயணைப்பு துறையினருக்கும் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த வீட்டிலிருந்த லேண்ட் லைன் போன் மூலம் தகவல் தெரிவித்ததாகவும், தீயணைப்பு துறையினர் வந்து தீயை அணைத்ததாகவும், சம்பவ இடத்திற்கு பேருந்தின் உரிமையாளரும் போலீசாரும் வந்ததாகவும், பின்னர் கல்லாவி காவல் நிலையம் சென்று பேருந்தின் நடத்துநர் சக்திவேல் புகார் கொடுத்ததாகவும், அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படுவது போன்ற கற்களை தான் எதிரிகள் அன்று பேருந்தின் மீது வீசி எறிந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 திரு.வெங்கடேசன் என்பவர் தனது சாட்சியத்தில் தான் கட்டிட வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை சரியாக ஞாபகம் இல்லை என்றும், சம்பவம் நடந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாகவும், கடந்த 25.06.2001 அன்று பதிவு எண்.1771 கொண்ட எஸ்.எம்.பி பேருந்தில் பரிசோதகராக சென்ற போது செங்கம் - கிருஷ்ணகிரி தடத்தில் மேட்டு தங்கலில் பயணிகளை இறக்கி விட்டு விட்டு சுமார் 2, 3 கி.மீ, பேருந்து சென்று கொண்டிருந்த போது சாலையின் இருபக்கமும் இருந்து இரவு 8 மணி போல கற்கள் வீசியதில் பேருந்தின் இருபக்கமும் கண்ணாடி மீது பட்டதில் கண்ணாடிகள் உடைந்ததாகவும், உடைந்த கண்ணாடி வழியாக தீ எறிந்தவாறு கீழே விழுந்ததாகவும், பேருந்து ஓட்டுநர் பேருந்தை நிறுத்தி விட்டதாகவும், பயணிகள் அலறியவாறு இறங்கி ஓடிவிட்டதாகவும், தாங்களும் இறங்கி, பக்கத்தில் இருந்த ஒரு வீட்டிற்கு சென்று அங்கிருந்த போன்மூலம் கல்லாவி காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததாகவும், போலீசார் வந்து விசாரித்ததாகவும், தாங்கள் காவல்நிலையம் சென்று, காவல் நிலையத்திலிருந்து பேருந்தின் உரிமையாளருக்கு தகவல் தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.4 திரு.பாரதி என்பவர் தனது சாட்சியத்தில் தான் கூலி வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை பார்த்ததில்லை என்றும், இதற்கு முன்னர் ஜே.ஜே.பி, சேலம் மற்றும் ஊத்தங்கரை நீதித்துறை நடுவர் முன்பாக இந்த வழக்கு குறித்து சாட்சியம் அளித்திருப்பதாகவும், சுமார் 23

வருடங்களுக்கு முன்னர் தேதி, மாதம் சரியாக தெரியாத நாள் ஒன்றில் எஸ்.எம்.பி.எஸ் பஸ்சில் செங்கம் முதல் கிருஷ்ணகிரி வழித்தடத்தில் கிளினராக பேருந்து எண்.1771ல் சென்றபோது ஊத்தங்கரையில் இருந்து சுமார் இரவு 7 முதல் 7.15 மணிக்குள் வண்டி புறப்பட்டு கல்லாவி நோக்கி சுமார் 10.கி.மீ பேருந்து வந்தபோது பஸ் மீது சுமார் 4 பேர் கற்களை எரிந்து கண்ணாடியை உடைத்ததாகவும், அப்போது திருமாவளவன் வாழ்க என்று சொன்னார்கள் என்றும், அதற்கு பின்னர் 10, 15 பேர் வந்ததாகவும், தாங்கள் இறங்கி ஓடி விட்டதாகவும், உள்ளே இருந்த பயணிகளும் இறங்கிவிட்டதாகவும், பின்னர் வண்டியை தீ வைத்து கொளுத்திவிட்டதாகவும், இதுசம்பந்தமாக நடத்துநர் சக்திவேல் கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.5 திரு.சக்திவேல் கிராம நிர்வாக உதவியாளர் தனது சாட்சியத்தில் தான் தற்போது ஒன்னக்கரை கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 25.06.2001 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் விடுதலை சிறுத்தை தலைவர் திருமாவளவனை கைது செய்திருந்தார்கள் என்றும், அதனால் செங்கத்திலிருந்து கல்லாவி வழியாக கிருஷ்ணகிரி வந்த எஸ்.எம்.பி.எஸ் தனியார் பஸ்சை TCD-1771 விடுதலை சிறுத்தை கட்சியினர் பயணிகளை இறக்கி விட்டு விட்டு பெட்ரோல் குண்டு போட்டு பஸ்சை தீ வைத்து கொளுத்திவிட்டார்கள் என்று கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் வந்ததாகவும், மறுநாள் அதாவது 26.06.2001 அன்று

காலை 6.00 மணிக்கு தானும், கிராம நிர்வாக அலுவலரும் கல்லாவி காவல் நிலைய காவல் ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், தங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதி வரைந்து கொண்டதாகவும், அந்த மகசரில் தானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சிகளாக கையொப்பம் போட்டுக்கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவதாக கண்டிருப்பது தன்னுடைய கையொப்பம் தான் என்றும், பின்னர் 28.06.2001 அன்று மாலை 5.00 மணியளவில் கும்மனூர் சாலைபிரிவில் பர்குணன் த/பெ.பெரியசாமி என்பவரை காவல் ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்து, வாக்குமூலம் வாங்கியதாகவும், அவரிடமிருந்து ஏதோ எரிந்துபோன சட்டையை கைப்பற்றியதாக ஞாபகம், ஆனால் சரியாக ஞாபகமில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் இரண்டாவதாக கண்டிருப்பது தன்னுடைய கையொப்பம் தான், ஆனால் அதுபற்றி சரியாக ஞாபகமில்லை, சட்டை ஏதோ கைப்பற்றியதாக ஞாபகம் என்றும், ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இவரது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

10. அ.சா.6 திரு.துரைசாமி என்பவர் தனது சாட்சியத்தில் தான் மேட்டுசூளைக்கரையில் குடியிருந்து வருவதாகவும், இன்றிலிருந்து சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக தான் தன்னுடைய கன்றுக்குட்டியை தன்னுடைய

தோட்டத்தில் கட்டிவிட்டு மாலை 4.00 மணிக்கு தன்னுடைய வீட்டிற்கு வந்து கொண்டிருந்ததாகவும், தன்னுடைய நிலமானது சூளக்கரைக்கு ரோட்டிற்கு அருகே உள்ளதாகவும், தான் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு சென்றபோது தன் நிலத்திற்கு அருகில் உள்ள ரோட்டில் SMBS என்ற பெயர் கொண்ட பேருந்தானது சிங்காரப்பேட்டையில் இருந்து கிருஷ்ணகிரிக்கு வரும் பேருந்து தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்ததாகவும், அப்போது அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை என்றும், பின்னிட்டு அந்த வாகனம் எப்படி தீப்பிடித்து என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், அந்த வாகனத்தை எடுத்து சென்று விட்டதாகவும், தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

11. அ.சா.7 திரு.கோவிந்தசாமி தனது சாட்சியத்தில் தான் தீயணைப்பு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டதாகவும், இந்த வழக்கு சமயத்தில் தான் போச்சம்பள்ளி தீயணைப்பு துறையில் பணியாற்றி வந்ததாகவும், 25.06.2001 தேதி இரவு 21.00 மணிக்கு கல்லாவி காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளர் அவர்கள், மேட்டுசூளக்கரை அருகில் பஸ் தீப்பிடித்து எரிவதாக தகவல் தெரிவித்ததாகவும், குழுவினர்களுடன் ஸ்தலத்திற்கு சென்று அங்கு தீயைக் கட்டுப்படுத்தியதாகவும், உதவிக்கு ஊத்தங்கரையில் இருந்து நீர்தாங்கி வண்டி வந்ததாகவும், பணி முடித்து நிலையம் திரும்பியதாகவும், சேதமதிப்பு தோராயமாக ரூ.40,000/- ஆகும் என்றும், தன்னை கல்லாவி காவல் ஆய்வாளர் விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவர்

வழங்கிய சேதமதிப்பு அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியிடப்படுகிறது.

12. அ.சா.8 திரு.எத்திராஜன் தனது சாட்சியத்தில் தான் 30.06.2008ல் மதுரை வட்டார போக்குவரத்து அலுவலகம் தெற்கில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளதாகவும், தான் 28.06.2001ல் மோட்டார் வாகன ஆய்வாளராக அரூரில் பணியாற்றி வந்த போது, கல்லாவி காவல் நிலைய குற்ற எண்.359/2001 வழக்கில் சட்டப்பிரிவுகள் 147, 148, 341 இதச உ/இ 3 & 4 of PPDL Act-ன்படி கல்லாவி காவல் நிலைய ஆய்வாளர் சேதமடைந்த பேருந்து எண்.1771 அதன் சேதமதிப்பீட்டு அறிக்கை தர வேண்டி கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சேத மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்ததாகவும், அந்த பேருந்தில் ஏற்பட்ட சேத மதிப்பீடு ரூ.1,85,000/- என்று தான் சேத மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்து கொடுத்ததாகவும், தன்னை கல்லாவி காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் வழங்கிய சேதமதிப்பீட்டு அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. அ.சா.9 திரு.ஜாபர்உசேன் காவல் ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில் தான் தற்போது கல்லாவி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2001ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கல்லாவி காவல்நிலைய குற்ற எண்.359/2001 சட்டப்பிரிவுகள் 147, 148, 341 IPC & 3 of PPDL Act வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர்

திரு.கிருஷ்ணன் பணி ஓய்வு பெற்று விட்டதாலும், தொடர் புலன்விசாரணை மேற்க்கொண்டு குற்ற பத்திரிகை தாக்கல் செய்த அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.உதயகுமார் இறந்து விட்டதாலும், இந்த வழக்கு கோப்பினை ஆவணங்களின் அடிப்படையில் தற்போதைய கல்லாவி காவல் நிலைய ஆய்வாளராகிய தான் வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதாகவும், கூறியுள்ளார்.

14. மேலும் அவர் தனது சாட்சியத்தில் கடந்த 25.06.2001 தேதி உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது இரவு 11.30 மணிக்கு SMBS என்ற பஸ்சின் நடத்துனர் திரு.சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் கல்லாவி காவல் நிலைய குற்றஎண்.359/2001 சட்டப்பிரிவுகள் 147, 148, 341 IPC & 3 of PPDL Act படி வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த புகார் மனுவை இறந்து போன கிருஷ்ணன் உயிருடன் இருந்த போது பெற்றுக்கொண்டதாகவும், அந்த புகாரானது அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியிடப்பட்டதாகவும், உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் அவர்கள் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முகமது உஸ்மான் மற்றும் சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்திருக்கிறார் என்றும், தன்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் கிருஷ்ணன் அவர்களால் தயார் செய்யப்பட்டது

அது அ.சா.ஆ.8 ஆக குறியிடப்பட்டதாகவும், பின்பு சம்பவ இடத்தில் இருந்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்களை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 7.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளதாகவும் அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக குறியிடப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்திருக்கின்றார்.

15. மேலும் அவர் தனது சாட்சியத்தில், உதவி ஆய்வளார் அவர்கள் சம்பவ இடத்திலிருந்த சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார், கைப்பற்றப்பட்ட கற்களுக்குண்டான படிவம் 95 அ.சா.ஆ.10 ஆகவும், கைப்பிடி அளவுள்ள 10 கருங்கற்கள் சா.பொ.1 வரிசையாகவும் குறியிடப்பட்டுள்ளது. பின்பு காவல் உதவி ஆய்வாளர், காட்டப்பட்டி கூட்டுரோடு அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் ராமசாமி, வரதராஜன், கிருஷ்ணன், முருகன், மூர்த்தி, ரமேஷ், பொன்னரசு ஆகியோர்களை 13.30 மணிக்கு கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். பின்னிட்டு கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேலும் அவர் தனது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் அவர்கள், புதூர் பிரிவு ரோடு அருகே நின்றிருந்த எதிரிகள் திருமால் மற்றும் சங்கர் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார் என்றும், பின்னர் கடந்த 28.06.2001ம் தேதி காலை 9.00 மணிக்கு

சரணடைந்து பிணையம் பெற்றிருக்கின்றனர். பின்னிட்டு கடந்த 17.12.2001 தேதி இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் திரு.உதயகுமார் அவர்கள் தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு போச்சம்பள்ளியில் உள்ள தீயணைப்பு துறை அலுவலகத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அறிக்கை பெற்றுள்ளார் என்றும், பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் எத்திராஜ், தீயணைப்பு துறை அலுவலர் கோவிந்தசாமி, முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 03.06.2002ம் தேதி எதிரிகள் 24 பேர் மீது சட்டப்பிரிவு 147, 148, 341 IPC & 3 of PPDL Act படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரிகள் A1 முனுசாமி, மற்றும் A 21 மாதேஸ்வரன் (எ) அண்ணாமலை இருவரை தவிர மீத எதிரிகள் மீது அமர்வு வழக்கு எண்.76/2016 வழக்கு நடந்து ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் 08.03.2016 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இதில் எதிரி A 21 மாதேஸ்வரன் (எ) அண்ணாமலை என்பவர் கடந்த10.10.2019 அன்று இறந்து விட்டதாகவும், அவரின் இறப்பு சான்றிதழ் அ.சா.ஆ.14ஆக குறியிடப்பட்டுள்ளது என்றும், காவல் ஆய்வாளர் உதயகுமார் என்பவர் இறந்து விட்டதாகவும், உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவர் இருப்பிடம் எங்கிருக்கிறது என்பதை கண்டறிய முடியவில்லை என்றும், ஆகவே தான் இன்று அவர்கள் சார்பாக கல்லாவி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சார்பாக சாட்சியம்

அளிப்பதாகவும் மேற்க்கண்ட விவரங்களை கூறி சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

17. அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 9 வரையான சாட்சிகள் எதிரிக்குப் பாதகமாக வழங்கப்பட்ட சாட்சியங்களைத் தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ) வின் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்டபோது எதிரி "தெரியாது என்றும், பொய்சாட்சி என்றும் கூறினார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று தெரிவித்தார். பின்னிட்டு எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

18. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், சம்பவ சமயத்தில், விடுதலை சிறுத்தை கட்சித்தலைவர் கைது செய்யப்பட்ட காரணத்தினால் கடந்த 25.06.2001ம் தேதி 20.30 மணியளவில் சாட்சி துரைசாமி என்பவரது வீட்டின் முன்பாக இவ்வழக்கின் எதிரி முனுசாமி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கலகம் விளைவிக்க வேண்டும் என்ற பொது எண்ணத்தில் கைகளில் பெட்ரோல் பாட்டில்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, கிருஷ்ணகிரி நோக்கி சென்று கொண்டிருந்த டி.சி.டி.1771 என்ற பதிவெண் கொண்ட எஸ்.எம்.பி.எஸ் என்ற பெயர் கொண்ட பேருந்தை சட்டவிரோதமாக தன்னிச்சையாக தடுத்து நிறுத்தி, பேருந்தின் டீசல் டேங்கின் மூடியை திறந்தும், பேருந்தின் முன்பக்க காற்றுத்தடைக் கண்ணாடி மற்றும்

ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து ரூ.1,85,000/- அளவிற்கு சேதம் விளைவித்ததால், இவ்வழக்கின் எதிரி முனுசாமி மேற்க்குறிப்பிட்டபடி பொது சொத்தை தாக்கி சேதப்படுத்த வேண்டும் என்ற சட்டவிரோத கூட்டத்தில் உறுப்பினரான இருந்து செயல்பட்டுள்ளார். எனவே எதிரி சட்டப்பிரிவு 148, 341 இதச, மற்றும் சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச ஆகிய பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்கவர் என்று வாதிட்டு, அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் அ.சா.1 முதல் 9 வரையான சாட்சிகள் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் 14 வரையான சான்றாவணங்கள் மூலமாகவும், சா.பொ.1 மூலமாகவும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

19. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும், இல்லை. புகார்தாரர் எதிரிக்கு எதிராக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகிய ஆவணங்களில் கையொப்பமிட்ட சாட்சிகள் அரசு தரப்புக்கு உதவும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் எதிரிக்கு எதிராக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அனைத்து விதங்களிலும் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கிலிருந்து

விடுதலை செய்யவேண்டும் என வாதிட்டார்.

**20. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,**

1) எதிரி சட்டப்பிரிவு 148 இதச பிரிவின்படி குற்றவாளியா?

2) எதிரி சட்டப்பிரிவு 341 இதச பிரிவின்படி குற்றவாளியா?

3) எதிரி சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து (சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச பிரிவின்படி குற்றவாளியா?

**1 முதல் 3 பிரச்சனைகளுக்கான தீர்வு :**

21. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 9 வரையான சாட்சிகள் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் 14 வரையான சான்றாவணங்கள் மூலமாகவும், சா.பொ.1 மூலமாகவும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராயும் போது, இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், "....கடந்த 25.06.2001 அன்று எஸ்.எம்.பி.எஸ் தனியார் பேருந்தில் (பதிவு எண்.T.C.D.1771) நடத்துநராக இருந்த போது மாலை 5.30 மணிக்கு செங்கத்தில் இருந்து புறப்பட்டு கிருஷ்ணகிரி வந்தபோது இரவு சுமார் 8.30 மணியளவில் மேட்டுசூளக்கரையிலிருந்து சுமார் 1 பர்லாங் தூரம் பேருந்து சென்றபோது சுமார் 25 பேர் சாலையின் இருபுறம் இருந்து வந்து பேருந்தை வழிமறித்து, பேருந்தின் முகப்பு மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளை உடைத்தார்கள். மேலும் பெட்ரோல் பாட்டிலை கொளுத்தி பேருந்தின் மீது

தூக்கி போட்டதில் தீ பிடித்தது. நான் அருகில் இருந்த வீட்டிற்கு சென்று உடனடியாக போன் மூலம் கல்லாவி காவல் நிலையத்திற்கும், பேருந்தின் உரிமையாளருக்கும் தகவல் சொன்னேன். பேருந்து முழுவதும் எரிந்து விட்டது. தீயணைப்பு துறையினர் வந்து அணைத்தார்கள். அந்த பேருந்தின் மதிப்பு சுமார் 3 லட்சம் இருக்கும். பின்னர் ஓட்டுநர் துரை, செக்கிங் வெங்கடேஷ், கிளீனர் பாரதி மற்றும் நான் கல்லாவி காவல் நிலையத்திற்கு நேரில் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது தான் நான் அன்று கைப்பட எழுதி கொடுத்த புகாரின் நகல். அதில் என்ன எழுதப்பட்டது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்து, அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். புகாரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கில் சம்பவம் நடந்த பேருந்தின் நடத்துனரான அ.சா.1, எதிரியை அடையாளம் காட்டி எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்பது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரிலும் எதிரியின் பெயரை குறிப்பிட்டு புகார் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அவர் தனது சாட்சியத்தில், புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என தற்போது ஞாபகமில்லை என்றும் கூறியுள்ளார். எனவே புகார்தாரரான அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்புக்கு உதவும் வகையில் அமையவில்லை.

22. இவ்வழக்கில் சம்பவம் நடந்த பேருந்தின் ஓட்டுநரான அ.சா.2 தனது சாட்சியத்தில், ”..சம்பவ சமயத்தில் எஸ்.எம்.பி.எஸ் தனியார் பேருந்தில் (பதிவு

எண். T.C.D 1771) ஓட்டுநராக இருந்தேன். 25.06.2001 அன்று மாலை 5.00 மணியளவில் செங்கத்திலிருந்து கிருஷ்ணகிரி நோக்கி சுமார் 8.15 மணியளவில் மேட்டுகுளக்கரை தாண்டி வந்து கொண்டிருந்த போது திருமாவளவனை கைது செய்திருந்ததால் அவரின் கட்சியை சேர்ந்தவர்கள் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று கோஷம் போட்டவாறு சுமார் 25 பேர் பஸ்ஸின் இருபுறமும் இருந்து வந்து கையளவு கல்லை வீசி எறிந்ததார்கள். அதில் கண்ணாடி உடைந்தது. பாட்டில்களில் பெட்ரோல் நிரப்பி, கொண்டு வந்திருந்ததை தீ வைத்து பேருந்தின் மீது வீசி எறிந்ததில் பேருந்து தீ பற்றி எரிந்தது. பேருந்து தீ பற்றி எரிந்து புகை மூட்டமாக இருந்ததால் எதிரிகள் யாரையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை, ஆஜர் எதிரி இருந்தாரா என்று சரியாக சொல்லத்தெரியவில்லை......" என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இவரது சாட்சியத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் போது, சம்பவ சமயத்தில் சுமார் 25 பேர் சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறியுள்ளாரே தவிர எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அவர் தனது சாட்சியத்தில் தீ பற்றி எரிந்து புகை மூட்டமாக இருந்ததால் எதிரிகள் யாரையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை என்று கூறியிருப்பதில் இருந்து சம்பவத்தில் இன்னார் தான் ஈடுபட்டார்கள் என சாட்சியால் தெளிவாக கூற இயலவில்லை என்பது தெளிவாகிறது.

23. இவ்வழக்கில் அ.சா.3 தனது சாட்சியத்தில், "ஆஜர் எதிரியை சரியாக ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

கடந்த 25.06.2001 அன்று பதிவு எண்.1771 கொண்ட எஸ்.எம்.பி பேருந்தில் பரிசோதகராக சென்ற போது செங்கம் - கிருஷ்ணகிரி தடத்தில் மேட்டு தங்கலில் பயணிகளை இறக்கி விட்டு விட்டு சுமார் 2, 3 கி.மீ, பேருந்து சென்று கொண்டிருந்த போது சாலையின் இருபக்கமும் இருந்து இரவு 8 மணி போல கற்கள் வீசியதில் பேருந்தின் இருபக்கமும் கண்ணாடி மீது பட்டதில் கண்ணாடிகள் உடைந்தன. உடைந்த கண்ணாடி வழியாக தீ எறிந்தவாறு கீழே விழுந்தது. பேருந்து ஓட்டுநர் பேருந்தை நிறுத்தி விட்டார். பயணிகள் அலறியவாறு இறங்கி ஓடிவிட்டார்கள். நாங்களும் இறங்கி விட்டோம்....”என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, சம்பவம் நடந்த பேருந்தில் பரிசோதகராக பயணம் செய்த அ.சா.3ம் சம்பவத்தில் யார் யார் ஈடுபட்டார்கள் என்பதை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. இவரது சாட்சியமும் அரசு தரப்புக்கு உதவும் வகையில் அமையவில்லை.

24. இவ்வழக்கில் சம்பவ நடந்த பேருந்தில் கிளீனராக இருந்த அ.சா.4 தனது சாட்சியத்தில், ”....ஆஜர் எதிரியை பார்த்ததில்லை. சுமார் 23 வருடங்களுக்கு முன்னர் தேதி, மாதம் சரியாக தெரியாத நாள் ஒன்றில் எஸ்.எம்.பி.எஸ் பஸ்சில் செங்கம் முதல் கிருஷ்ணகிரி வழித்தடத்தில் கிளினராக பேருந்து எண்.1771ல் சென்றபோது கல்லாவி நோக்கி சுமார் 10.கி.மீ பேருந்து வந்தபோது பஸ் மீது சுமார் 4 பேர் கற்களை எரிந்து கண்ணாடியை உடைத்தார்கள். அப்போது திருமாவளவன் வாழ்க என்று சொன்னார்கள். அதற்கு பின்னர் 10, 15 பேர் வந்ததார்கள். நாங்கள் இறங்கி ஓடி விட்டோம். உள்ளே இருந்த பயணிகளும் இறங்கி வந்தார்கள். பின்னர் வண்டியை தீ

வைத்து கொளுத்திவிட்டார்கள்.... என்று சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கின்றபோது முதலில் 4 நபர்களும் பின்னிட்டு 10, 15 நபர்களும் வந்து வண்டியை தீ வைத்து கொளுத்தியதாக கூறியுள்ளாரே எதிரி தான் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து வண்டியை தீ வைத்து கொளுத்தியதாக அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை.

25. இவ்வழக்கில் கிராம நிர்வாக உதவியாளரான அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 25.06.2001 அன்று எம்.பி.எஸ் தனியார் பஸ்சை TCD-1771 விடுதலை சிறுத்தை கட்சியினர் பயணிகளை இறக்கி விட்டு விட்டு பெட்ரோல் குண்டு போட்டு பஸ்சை தீ வைத்து கொளுத்திவிட்டார்கள் என்று கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் வந்தது. மறுநாள் 26.06.2001 அன்று காலை 6.00 மணிக்கு நானும், கிராம நிர்வாக அலுவலரும் கல்லாவி காவல் நிலைய காவல் ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு சென்றோம்... காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதி வரைந்து கொண்டார். அந்த மகசரில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சிகளாக கையொப்பம் போட்டுக்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் 2வதாக கண்டிருப்பது என்னுடைய கையொப்பம் தான். பின்னர் 28.06.2001 அன்று மாலை 5.00 மணியளவில் கும்மனூர் சாலைபிரிவில் பர்குணன் த/பெ.பெரியசாமி என்பவரை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்து, வாக்குமூலம் வாங்கினர். அவரிடமிருந்து ஏதோ எரிந்துபோன சட்டையை கைப்பற்றியதாக ஞாபகம், ஆனால் சரியாக

ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் இரண்டாவதாக கண்டிருப்பது என்னுடைய கையொப்பம் தான். ஆனால் அதுபற்றி சரியாக ஞாபகமில்லை. சட்டை ஏதோ கைப்பற்றியதாக ஞாபகம்..... என்று சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள இவரது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவரது சாட்சியத்தின் அடிப்படையில் ஆராயும் போது இவர் முன்பாக இவ்வழக்கின் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ எதிரியிடமிருந்து வழக்கு சம்பந்தப்பட்ட தடயங்கள் கைப்பற்றப்பட்டதாகவோ தெரிய வரவில்லை. மேலும் இவர் தனது சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக எந்த விவரங்களையும் கூறவில்லை. எனவே இவரது சாட்சியமும் அரசு தரப்புக்கு ஆதரவாக அமையவில்லை.

26. இவ்வழக்கில் சம்பவம் நடந்த இடத்தின் அருகில் குடியிருந்து வரும் அ.சா.6 துரைசாமி என்பவர் தனது சாட்சியத்தில், ”...நான் மேட்டுசூளைக்கரையில் குடியிருந்து வருகிறேன்..... இன்றிலிருந்து சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக ...நான் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு சென்றபோது என் நிலத்திற்கு அருகில் உள்ள ரோட்டில் SMBS என்ற பெயர் கொண்ட பேருந்தானது சிங்காரப்பேட்டையில் இருந்து கிருஷ்ணகிரிக்கு வரும் பேருந்து தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. அப்போது அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை... அந்த வாகனம் எப்படி தீப்பிடித்து என்ற விவரம் எனக்கு தெரியாது....” என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

27. இவ்வழக்கில் அ.சா.7 திரு.கோவிந்தசாமி என்பவர் தனது சாட்சியத்தில், ”...இந்த வழக்கு சமயத்தில் நான் போச்சம்பள்ளி தீயணைப்பு துறையில் பணியாற்றி வந்தேன். 25.06.2001 தேதி இரவு 21.00 மணிக்கு கல்லாவி காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளர் அவர்கள், மேட்டுகூளக்கரை அருகில் பஸ் தீப்பிடித்து எரிவதாக தகவல் தெரிவித்தார். குழுவினர்களுடன் ஸ்தலத்திற்கு சென்று அங்கு தீயைக் கட்டுப்படுத்தினேன். உதவிக்கு ஊத்தங்கரையில் இருந்து நீர்தாங்கி வண்டி வந்தது. சேதமதிப்பு தோராயமாக ரூ.40,000/- ஆகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் வழங்கிய சேதமதிப்பு அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியிடப்பட்டுள்ளது. எனவே இவரும் தனது சாட்சியத்தில் பேருந்தின் சேதமதிப்பு மதிப்பு பற்றியும், தான் தீயை கட்டுப்படுத்தியது குறித்து மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். எதிரிக்கு எதிராக எந்த ஒரு சாட்சியமும் இவர் அளிக்கவில்லை.

28. இவ்வழக்கில் அ.சா.8 திரு.எத்திராஜன் என்பவர் தனது சாட்சியத்தில், ”....நான் 28.06.2001ல் மோட்டார் வாகன ஆய்வாளராக அரூரில் பணியாற்றி வந்த போது, கல்லாவி காவல் நிலைய குற்ற எண்.359/2001 வழக்கில் சட்டப்பிரிவுகள் 147, 148, 341 இதச உ/இ 3 & 4 of PPDL Act-ன்படி கல்லாவி காவல் நிலைய ஆய்வாளர் சேதமடைந்த பேருந்து எண்.1771 அதன் சேதமதிப்பீட்டு அறிக்கை தர வேண்டி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சேத மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த பேருந்தில் ஏற்பட்ட சேத மதிப்பீடு ரூ.1,85,000/- என்று நான் சேத மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்து

கொடுத்தேன்... என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் வழங்கிய சேதமதிப்பீட்டு அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவரும் தனது சாட்சியத்தில் பேருந்தின் சேதமதிப்பு மதிப்பு குறித்து மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். எதிரிக்கு எதிராக எந்த ஒரு சாட்சியமும் இவர் அளிக்கவில்லை.

29. இவ்வழக்கில் புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் பணி ஓய்வு பெற்று விட்டதாலும், தொடர் புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.உதயகுமார் அவர்கள் இறந்து விட்டதாலும், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் அ.சா.9 திரு.ஜாபர் உசேன் அவர்கள் சாட்சியம் அளித்துள்ளார். கடந்த 25.06.2001 அன்று காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது சக்திவேல் என்பவர் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார். புகாரானது அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியிடப்பட்டுள்ளது. பின்னிட்டு உதவி ஆய்வாளர் கிருஷ்ணன், சம்பவஇடம் சென்று சாட்சிகள் முகமது உஸ்மான் மற்றும் சக்திவேல் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்திருக்கிறார். மாதிரி வரைபடம் கிருஷ்ணன் அ.சா.ஆ.8 ஆக குறியிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் இருந்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்களை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக குறியிடப்பட்டுள்ளது.

30. பின்னர் உதவி ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறார், கைப்பற்றப்பட்ட கற்களுக்குண்டான படிவம் 95 அ.சா.ஆ.10 ஆகவும், கைப்பிடி அளவுள்ள 10 கருங்கற்கள் சா.பொ.1 வரிசையாகவும் குறியிடப்பட்டுள்ளது. பின்பு காவல் உதவி ஆய்வாளர், காட்டப்பட்டி கூட்டுரோடு அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் ராமசாமி, வரதராஜன், கிருஷ்ணன், முருகன், மூர்த்தி, ரமேஷ், பொன்னரசு ஆகியோர்களை 13.30 மணிக்கு கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். பின்னிட்டு கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.

31. பின்னிட்டு, காவல் உதவி ஆய்வாளர் அவர்கள், புதுார் பிரிவு ரோடு அருகே நின்றிருந்த எதிரிகள் திருமால் மற்றும் சங்கர் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். பின்னிட்டு கடந்த 17.12.2001 தேதி காவல் ஆய்வாளர் திரு.உதயகுமார் அவர்கள் வழக்கினை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு போச்சம்பள்ளியில் உள்ள தீயணைப்பு துறை அலுவலகத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அறிக்கை பெற்றுள்ளார். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் எத்திராஜ், தீயணைப்பு துறை அலுவலர் கோவிந்தசாமி, முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 03.06.2002ம் தேதி எதிரிகள் 24 பேர் மீது சட்டப்பிரிவு 147, 148, 341 IPC & 3 of PPDL Act படி

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் A1 முனுசாமி, மற்றும் A 21 மாதேஸ்வரன் (எ) அண்ணாமலை இருவரை தவிர மீத எதிரிகள் மீது அமர்வு வழக்கு எண்.76/2016 வழக்கு நடந்து ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் 08.03.2016 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இதில் எதிரி A 21 மாதேஸ்வரன் (எ) அண்ணாமலை என்பவர் கடந்த10.10.2019 அன்று இறந்து விட்டதாகவும், அவரின் இறப்பு சான்றிதழ் அ.சா.ஆ.14ஆக குறியிடப்பட்டுள்ளது என்றும், காவல் ஆய்வாளர் உதயகுமார் என்பவர் இறந்து விட்டதாகவும், உதவி ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவர் இருப்பிடம் எங்கிருக்கிறது என்பதை கண்டறிய முடியவில்லை என்றும், ஆகவே தான் இன்று அவர்கள் சார்பாக கல்லாவி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சார்பாக சாட்சியம் அளிப்பதாக கூறி, சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.9 திரு.ஜாபர் உசேன் அவர்கள் வழக்கில் மேற்க்கொள்ளப்பட்ட புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

32. அரசு தரப்பில், சம்பவ சமயத்தில், விடுதலை சிறுத்தை கட்சித்தலைவர் கைது செய்யப்பட்ட காரணத்தினால் கடந்த 25.06.2001ம் தேதி 20.30 மணியளவில் மற்ற எதிரிகளுடன் இவ்வழக்கின் எதிரி முனுசாமி என்பவரும் சேர்ந்து கலகம் விளைவிக்க வேண்டும் என்ற பொது எண்ணத்தில் கைகளில் பெட்ரோல் பாட்டில்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, கிருஷ்ணகிரி நோக்கி சென்று கொண்டிருந்த டி.சி.டி.1771 என்ற பதிவெண் கொண்ட எஸ்.எம்.பி.எஸ்

என்ற பெயர் கொண்ட பேருந்தை சட்டவிரோதமாக தன்னிச்சையாக தடுத்து நிறுத்தி, மேற்ச்சொன்ன டி.சி.டி.1771 என்ற பதிவெண் கொண்ட எஸ்.எம்.பி.எஸ் என்ற பெயர் கொண்ட பேருந்தின் டீசல் டேங்கின் மூடியை திறந்தும் பேருந்தின் முன்பக்க காற்றுத்தடைக் கண்ணாடி மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து ரூ.1,85,000/-த்திற்கு சேதம் விளைவித்ததால், இவ்வழக்கின் எதிரி முனுசாமி மேற்க்குறிப்பிட்டபடி பொது சொத்தை தாக்கி சேதப்படுத்த வேண்டும் என்ற சட்டவிரோத கூட்டத்தில் உறுப்பினரான இருந்து செயல்பட்டுள்ளார் என்று எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கில் சம்பவம் நடந்த பேருந்தின் நடத்துனரும், புகார்தாரருமான அ.சா.1, எதிரியை அடையாளம் காட்டி எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்பது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரிலும் எதிரியின் பெயரை குறிப்பிட்டு புகார் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அவர் தனது சாட்சியத்தில், புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என தற்போது ஞாபகமில்லை என்றும் கூறியுள்ளார்.

33. மேலும் பேருந்தின் ஓட்டுநரான அ.சா.2ம் தனது சாட்சியத்தில் பேருந்து தீ பற்றி எரிந்து புகை மூட்டமாக இருந்ததால் எதிரிகள் யாரையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை என்று கூறியிருப்பதில் இருந்து சம்பவத்தில் இன்னார் தான் ஈடுபட்டார்கள் என தெளிவாக கூற இயலவில்லை என்பது தெளிவாகிறது. சம்பவம் நடந்த பேருந்தில் பரிசோதகராக பயணம் செய்த அ.சா.3ம் சம்பவத்தில் யார் யார் ஈடுபட்டார்கள் என்பதை அடையாளம்

காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. பேருந்தில் கிளீனராக வேலை பார்த்த அ.சா.4ம் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கில் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகிய ஆவணங்களில் கையொப்பமிட்ட கிராம நிர்வாக உதவியாளர் அ.சா.5ம் அரசு தரப்புக்கு உதவும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அனைத்து விதங்களிலும் அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறி விட்டதால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து, எதிரி மீதான சட்டப்பிரிவு 148, 341 இதச, மற்றும் சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக எதிரி மீதான சட்டப்பிரிவு 148, 341 இதச, மற்றும் சட்டப்பிரிவு தமிழ்நாடு பொது சொத்து சேதம் மற்றும் இழப்பு) தடுப்புச்சட்டம் 1992 பிரிவு 3(1) உ/இ 149 இதச ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு வழங்கி, எதிரி மேற்ச்சொன்னகுற்றச்சாட்டுகளின்படி குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஏதேனுமிருப்பின் அதனை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் சி.பி.எண்.13/2024ல் உள்ள கைப்பிடி அளவுள்ள பத்து கருங்கற்களை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு உரைக்கப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கி சரிபார்க்கப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12ஆம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

LATHA V R

Principal District Judge
Digitally signed by LATHA V R
Location: Krishnagiri
Date: 2026.03.13 17:17:31 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
கிருஷ்ணகிரி.

**<u>இணைப்பு:</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 11.03.2024 | திரு.சக்திவேல் (பிறழ்சாட்சி) |
| அ.சா.2 | 11.03.2024 | திரு. துரை |
| அ.சா.3 | 18.03.2024 | திரு.வெங்கடேசன் |
| அ.சா.4 | 01.04.2024 | திரு.பாரதி |
| அ.சா.5 | 14.10.2024 | திரு.சக்திவேல் கிராம நிர்வாக உதவியாளர் |
| அ.சா.6 | 05.02.2025 | திரு.துரைசாமி(பிறழ்சாட்சி) |
| அ.சா.7 | 26.03.2025 | திரு.கோவிந்தசாமி |
| அ.சா.8 | 28.10.2025 | திரு.எத்திராஜன் |
| அ.சா.9 | 17.02.2026 | திரு.ஜாபர் உசேன் காவல் ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.06.2001 | புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 26.06.2001 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 28.06.2001 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது |

| | | |
|---|---|---|
| | | கையெழுத்து (அ.சா.5) |
| அ.சா.ஆ.4 | 25.06.2001 | தீயணைப்பு துறை வழங்கிய சேதமதிப்பு அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 28.06.2001 | மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய சேத மதிப்பு அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 25.06.2001 | புகார் |
| அ.சா.ஆ.7 | 25.06.2001 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 25.06.2001 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | 26.06.2001 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.10 | 26.06.2001 | படிவம் 91 |
| அ.சா.ஆ.11 | 28.06.2001 | எதிரி பற்குணன் என்பவர் கொடுத்த ஒப்பதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.12 | 28.06.2001 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.13 | 14.07.2001 | எதிரி செந்தில்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.14 | 13.12.2019 | எதிரி மாதேஷ்வரன்(எ)அண்ணாமலையின் இறப்பு சான்றிதழ் |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்: (C.P.No.13/2024)</u>**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | 26.06.2001 | கைப்பிடி அளவுள்ள பத்து கருங்கற்கள் |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்,சான்றுப்பொருள் :</u>** இல்லை

----

LATHA V R

Principal District Judge
Digitally signed by LATHA V R
Location: Krishnagiri
Date: 2026.03.13 17:17:23 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கிருஷ்ணகிரி.